# இயேசுவோடு

## ஒரு மணி நேரம்

தேசங்களுக்காக ஜெபிக்க...



**"...ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?"** மத்தேயு 26:40.

# உங்கள் சகோதரனிடமிருந்து...



பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் நல் வாழ்த்துக்கள்!

தேசத்தின் எழுப்புதலுக்காக, ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க அர்ப்பணித்திருக்கிற உங்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்!

**கடைசிக் காலத்தில் வெளிப்படப் போகிற உலகம் தழுவிய எழுப்புதல் இந்தியாவிலிருந்துதான் ஆரம்பிக்கப்படப் போகிறது!** மிகச் சீக்கிரத்தில் அதை நாம் அனுபவிக்கப் போகிறோம்! அதற்கு முன்பாக தேவன் தேசத்தையும், திருச்சபைகளையும் சுத்திகரித்துக் கொண்டிருக்கிறார்.

**தேவனின் தண்டனை தேசத்தில் நிறைவேறுகிற காலம், ஜெபிக்கிறவர்களின் நிமித்தமாக மட்டுமே குறைக்கப்படும்.** மாத்திரமல்ல, இந்தியாவில் தேவன் செய்யப் போகிற மகிமையான எழுப்புதல் திட்டங்கள் சாத்தானுக்கும் தெரியும்.

அவனுக்குக் கொடுக்கப்பட்ட நாட்கள் முடியப் போகிறது! எனவே தனக்கு கொஞ்சக் காலம் மாத்திரமே இருக்கிறது என்பதை அறிந்து, சத்துருவானவன் தேசத்தில் தேவ கோபாக்கினை வருவதற்குக் காரணமான பாவங்களை அரங்கேற்ற பாதாளத்தின் ஆவிகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறான்.

**எந்தக் காலமும் இல்லாத அளவிற்கு தேசத்தில் பாவங்கள் பெருகியிருக்கிறது.** இவைகள் **நம்முடைய ஜெபத்தினால் மாத்திரமே தடை செய்யப்பட முடியும்.** எனவே தினமும் அதிகாலையில் குறைந்தது ஒரு மணி நேரமாவது தேவ சமூகத்தை நாடுங்கள், **தேசத்திற்காக ஜெபியுங்கள்.**

உங்கள் ஜெபத்திற்கு உதவியாக **இந்த ஜெபக் குறிப்பேட்டைப் பயன்படுத்துங்கள்.** எல்லா ஜெபக் குறிப்புகளுக்கும் ஒரே நாளில் ஜெபித்து விட முடியாது. ஆவியானவர் வழி நடத்துகிறபடி **ஜெபியுங்கள்.** ஒரு ஜெபக் குறிப்பிற்காக நீங்கள் சிந்தையை ஒருமுகப்படுத்தி ஜெபிக்க ஆரம்பிக்கும்போதே, நம்முடைய கர்த்தராகிய தேவன் உங்களோடு இணைந்து வாக்குக் கடங்காத பெரு மூச்சுகளோடு மன்றாடுவார். உங்கள் ஜெப நேரம் மகிமையானதாக இருக்கும்.

நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் இந்த ஜெபக் கையேட்டை பயன்படுத்துங்கள். ஜெபிக்கிற காரியங்களுக்கான பதிலை செய்தித் தாள்களிலோ, தொலைக்காட்சி செய்திகளிலோ எதிர்பாருங்கள். நிச்சயம் பதிலைப் பெறுவீர்கள்.

தேவ ஜனங்களாகிய நாம் தனியாக, குடும்பமாக, திருச்சபையாக இணைந்து ஜெபிக்கும்பொழுது தேசத்தில் தீமைகள் அகற்றப்பட்டு, நன்மைகள் விளைகிறதை நம்மால் காண முடியும். **ஆர்வத்தில் சில நாட்கள் ஜெபித்து விட்டு, பின் அசதியாய் இருந்து விடாதீர்கள்.** ஆதித்திருச்சபை விசுவாசிகளைப்போல ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம்! எழுப்புதலைக் காண்போம்!

**உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்!** எனக்காக, '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியங்களுக்காக நீங்கள் **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.

மோகன் சி. லாசரஸ்

# ஒரு மணி நேரம்
# ஜெபிப்பது எப்படி ?



*15 நிமிடங்கள்!*

ஒரு சில பாடல்களைப் பாடி, தேவனைத் துதியுங்கள்! ஸ்தோத்திரம் செலுத்துங்கள்!

*பிதாவாகிய தேவன்!*

தேவனுடைய நாமங்களை, அவர் செய்த அதிசயங்களை சொல்லி அவரைத் துதியுங்கள்!

*குமாரனாகிய கிறிஸ்து!*

இயேசு கிறிஸ்துவின் நாமங்களைச் சொல்லி, அவர் செய்து வருகிற அதிசயங்களைச் சொல்லி, அவரை துதியுங்கள்.

*பரிசுத்த ஆவியானவர்!*

ஆவியானவருடைய நாமங்களை, அவருடைய கிரியைகளைச் சொல்லி, அவரை துதியுங்கள்! திரியேக தேவனாகிய கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் செய்த எண்ணி முடியாத நன்மைகளை நினைத்து, அவரை துதியுங்கள்!

*15 நிமிடங்கள்!*

பரிசுத்த வேதாகமத்தை தியானியுங்கள்! முழங்காலில் நின்று வேதாகமத்தை வாசித்து, தியானித்து, கர்த்தர் உங்களோடு பேசுகிற வசனத்திற்குக் கீழ்படிய உங்களை அர்ப்பணித்து ஜெபியுங்கள். வாக்குத்தத்தத்தை சுதந்தரித்து ஜெபியுங்கள். முடிந்தால், தினமும் ஒரு வேத வசனத்தை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

*25 நிமிடங்கள்!*

கொடுக்கப்பட்டுள்ள ஜெபக் குறிப்புகளை தேவ சமூகத்தில் சொல்லி ஜெபியுங்கள். ஆவியானவர் உங்களோடு ஏவுகிறபடியே தினமும் ஜெபியுங்கள்.

*5 நிமிடங்கள்!*

உங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்பக் காரியங்களை தேவனுக்குத் தெரியப்படுத்தி ஜெபியுங்கள். உங்கள் ஜெபம் கேட்கப்பட்டதற்காக, தேவனுக்கு மகிமை செலுத்துங்கள்.



# கர்த்தரை ஸ்தோத்தரித்து, துதியுங்கள்!

1. கர்த்தராகிய தேவன் ஒருவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமை உள்ளவரும், ஒருவரும் சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் இதுவரை ஒருவரும் கண்டிராதவரும், இனி ஒருபோதும் காணக் கூடாதவருமாக இருக்கிறவர்! அவருக்கே எல்லா கனத்தையும், மகிமையையும் செலுத்தி, **ஸ்தோத்தரித்து, துதியுங்கள்!**

2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய இந்திய தேசத்தை நேசிக்கிறதற்காக, இந்தியர்கள் ஒவ்வொருவருக்காகவும் அவருடைய விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதற்காக, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட அவர் சித்தமுள்ளவராக இருக்கிறபடியினால், அவரை **ஸ்தோத்தரிப்போம்!**

3. இந்திய தேசத்தின் பெயர் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறதற்காக, 2000 வருடங்களுக்கு முன்பாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலனாகிய பரிசுத்த **தோமா**வை இந்தியாவிற்கு அனுப்பி, அவர் மூலமாக அனேக திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதற்காக, தேசத்தில் எழுப்புதலைக் கட்டளையிட்டதற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரிப்போம்!**

4. இந்திய தேசத்தின் மீது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வைத்திருக்கிற அன்பினால், ஏராளமான மிஷனெரிகளை கோதுமை மணிகளாக மரிக்க இந்த தேசத்திற்கு அனுப்பியதற்காக, அவர்கள் மூலமாக 'இயேசு' என்கிற இரட்சகரை இந்த தேசம் அறியச் செய்ததற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரிப்போம்!**

5. இந்தியாவில் கர்த்தர் எழுப்பியிருக்கிற எல்லா திருச்சபைகளுக்காக, 5 விதமான தேவ ஊழியர்களுக்காக (அப்போஸ்தலர்களுக்காக, தீர்க்கதரிசிகளுக்காக, சுவிசேஷகர்களுக்காக, மேய்ப்பர்களுக்காக மற்றும் திருச்சபைப் போதகர்களுக்காக), கர்த்தரை **ஸ்தோத்தரிப்போம்!**

6. கடைசிக் கால மகிமையான எழுப்புதல் இந்தியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, உலகமெங்கும் பரவ வேண்டும் என்பது தேவ சித்தமாக இருக்கிறதற்காக, அதற்கான வேளை வந்ததற்காக, அதற்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரிப்போம்!**

7. நீர் வளம், நில வளம், கனிம வளம் போன்ற எல்லா வளங்களும் நிறைந்த ஒரு தேசமாக கர்த்தர் இந்தியாவை ஆசீர்வதித்து இருப்பதற்காக, அவரை **ஸ்தோத்தரிப்போம்!**

8. இந்தியாவை கர்த்தர் நல்லதொரு குடியரசு நாடாகவும், ஜீவனுள்ள தேவனை சுதந்தரமாக ஆராதிப்பதற்கும், அவருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துவதற்கும் ஏற்ற ஒரு தேசமாக வைத்திருப்பதற்காக, அவரை **ஸ்தோத்தரிப்போம்!**

9. இந்திய தேசத்தின் சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கெடுக்க சத்துருவான சாத்தான் எவ்வளவோ தந்திரமான காரியங்களைச் செய்து வருகிற பொழுதிலும், கர்த்தர் அவனுடைய திட்டங்களையும், தீய செயல்களை எல்லாம் நமக்கு வெளிப்படுத்தி, அதற்காக நம்மை ஜெபிக்க வைத்து, அந்தக் காரியங்கள் எல்லாவற்றின் மீதும் நமக்கு ஜெயம் கொடுத்ததற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரிப்போம்!**

10. இந்தியாவை உலகிலேயே 4வது வல்லரசு நாடாக கர்த்தர் ஆசீர்வதித்து, சுற்றிலும் இருக்கிற அண்டை நாடுகள் மற்றும் தீவிரவாத இயக்கங்களினின்று இந்த தேசத்தை பாதுகாத்து வருகிறதற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரிப்போம்!**




1. “தமிழ்நாட்டிலுள்ள திருச்சபைகள் மூலமாக எழுப்புதல் ஆரம்பித்து, அது தென் மாநிலங்களில் எல்லாம் பரவி, இந்தியா மற்றும் உலக நாடுகளில் பற்றி எரியும்!” என்று கர்த்தர் உரைத்த வாக்குத்தத்தம் நிறைவேற **ஜெபியுங்கள்.**

2. **“தேசத்தில் எழுப்புதல் அக்கினி விழுவதற்கு முன்பாக, திருச்சபைகள் சுத்திகரிக்கப்பட வேண்டும்!”** என்பது தேவ சித்தம்! திருச்சபைகளில் காணப்படும் சீர்கேடுகள், பாரம்பரியங்கள், நிர்விசாரங்கள், இச்சைகள், பதவி ஆசைகள், சுயநலன்கள், போட்டி-பொறாமைகள் முற்றிலுமாக சுட்டெரிக்கப்பட **ஜெபியுங்கள்.**

3. எல்லா திருச்சபைகளிலும் ஒரு ஜெப எழுப்புதல் பற்றியெரிய **ஜெபியுங்கள்.** தேவ ஊழியர்கள், மூப்பர்கள், வாலிபர்கள் மற்றும் சிறு பிள்ளைகள் அத்தனை பேர் மீதும் ஒரு ஜெப ஆவி ஊற்றப்படும்படியாக, அவர்கள் ஒவ்வொருவரும் ஆதித் திருச்சபை விசுவாசிகளைப்போல ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்கிறவர்களாக மாற **ஜெபியுங்கள்.**

4. **லூக்கா 12:49**ல் சொல்லப்பட்டிருக்கிறபடி, பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு திருச் சபைகளிலும் இறங்க, அத்தனை பேரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அன்னிய பாஷை பேசி ஜெபிக்கிறவர்களாக மாற **ஜெபியுங்கள்.**

5. **ஏசாயா 52:10, அப். 2:47**ன்படி, இந்திய தேசத்தில் ஒரு இரட்சிப்பின் எழுப்புதல் உண்டாக, எல்லா கிராமங்கள் மற்றும் பட்டணங்களில் உள்ள ஜனங்கள் திரள் திரளாக இரட்சிக்கப்பட்டு, திருச்சபைகளில் சேர்க்கப்படுகிற எழுப்புதல் உண்டாக **ஜெபியுங்கள்.**

6. **மல்கியா 3:1-3**ன்படி, இந்திய தேசத்தில் ஒரு சுத்திகரிப்பின் எழுப்புதல் உண்டாக, திருச்சபைகளில், அரசியலில், மனிதர்களுடைய சிந்தனைகளில் மறுரூபம் உண்டாக, அவர்களுக்குள் ஒரு தெய்வீக சந்தோஷமும், கபடமும் இல்லாத இருதயம் உண்டாக **ஜெபியுங்கள்.**

7. **அப். 13:47-49** வரை எழுதியிருக்கிறபடி, வேத வசனத்தைக் குறித்த ஒரு எழுப்புதல் இந்திய தேசத்தில் உண்டாக,தேவ ஊழியர்களும், தேவ ஜனங்களும் வேத வசனத்தை ஆராய்ந்து பார்த்து, தியானித்து, ஜெபிக்கிறவர்களாக மாற **(அப். 17:11)**, வேத வசனங்களை தைரியமாகப் பிரசங்கிக்கிறவர்களாக மாற **(அப். 4:31; 8:4) ஜெபியுங்கள்.**

8. **அப். 2:43; 5:12**ல் எழுதப்பட்டிருக்கிற காரியம் நடந்தைப்போல, ஒரு வல்லமையின் எழுப்புதல் இந்திய தேசத்தில் உண்டாக, தேவ ஊழியர்களும், விசுவாசிகளும் எழும்பி கர்த்தருடைய வல்லமையை நிரூபிக்கிறவர்களாக விளங்க, கர்த்தருடைய வல்லமை பெரிதாக தேசத்தில் வெளிப்பட, மிகச் சாதாரணமானவர்களைக் கொண்டும் கர்த்தர் அசாதாரணமான காரியங்களைச் செய்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்த **ஜெபியுங்கள்.**

9. தீர்க்கதரிசன எழுப்புதல் **(தரிசிக்கிறவர்கள், தேவ சத்தம் கேட்கிறவர்கள்)** ஏற்பட, வாலிபர்கள், கன்னிகைகள், தேவ ஊழியர்கள், திருச்சபை மூப்பர்கள் எல்லோர் மீதும் தீர்க்கதரிசன வரம் பொழிந்தருளப்பட, அத்தனை பேரும் தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களாக **(மத்தேயு 24:14)** விளங்க **ஜெபியுங்கள்.**

10. தேசத்திலுள்ள எல்லா திருச்சபைகளிலும் ஒரு எழுப்புதல் உண்டாக, திருச்சபைகள் இல்லாத எல்லா இடங்களிலும் திருச்சபைகள் உருவாகி வளர்ந்து பெருக, திருச்சபைகளுக்காக **ஜெபியுங்கள்.**



# போராடி ஜெபியுங்கள்!

1. எழுப்புதலைத் தடை செய்ய கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் எல்லா விதமான அசுத்த ஆவிகளையும் **கட்டுங்கள்.**

(i) கர்த்தருக்கு ஊழியம் செய்ய விடாமல், தங்களுக்காகவும், தங்கள் ஸ்தாபனங்களுக்காகவும் வேலை செய்யத் தூண்டுகிற பொல்லாத ஆவிகளையும், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற விடாமல், தேவ இராஜ்ஜியத்தைக் கட்டுவதற்குப் பதிலாக, தங்களுக்கென்று தனி இராஜ்ஜியத்தைக் கட்டத் தூண்டுகிற பொல்லாத ஆவிகளையும் **(Spirit of Organisation)** கட்டி **ஜெபியுங்கள்.** தேவ ஊழியர்கள் அனைவரும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக விளங்க **ஜெபியுங்கள்.**

(ii) கள்ளத் தீர்க்கதரிசனம், கள்ள உபதேசம், கள்ள ஆராதனை செய்கிற, போலியான அற்புதங்களைச் செய்து, தங்களைத் தாங்களே உண்மையான எழுப்புதல் வீரர்களாகக் காட்டிக் கொள்கிற கள்ள ஊழியர்கள் மனந்திரும்ப, அவர்களைப் பயன்படுத்துகிற அசுத்த ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

(iii) திருச்சபைகளுக்குள்ளே நிர்விசாரத்தைத் தூண்டுகிற சர்ப்பத்தின் ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.** ஜெபிக்க விடாமல், ஊழியம் செய்ய விடாமல், எப்பொழுதும் உலகப் பிரகாரமான சிந்தைகளால் தேவ பிள்ளைகளை நிரப்பி, அவர்களை கர்த்தருக்காக எழும்பிப் பிரகாசிக்க முடியாதபடி செய்கிற சகல அசுத்த ஆவிகளையும் கட்டி **ஜெபியுங்கள்.**

(iv) பிசாசானவன், திருச்சபைகளுக்கு விரோதமான சட்டங்களை இயற்றப் பண்ணி, திருச்சபைகளைப் பாழாக்கவும், திருச்சபைகளின் முற்பிதாக்களும், மிஷனெரிகளும் சேகரித்து வைத்திருக்கிற சொத்துக்களை **(நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உட்பட)** அபகரிக்கும் விதமான சதித் திட்டங்களையும் தீட்டி வருகிறான். அவனுடைய சதி வேலைகள் அனைத்தும் முறியடிக்கப்பட **ஜெபியுங்கள்.**

2. தேசத்தில் தேவனுடைய கோபாக்கினையைக் கொண்டு வரும்படியான தீய காரியங்களைச் செய்யத் தூண்டுகிற பொல்லாத அசுத்த ஆவிகளை **கட்டுங்கள்.**

(ii) வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் உண்டாக்கிய, சர்வ சிருஷ்டிகரான தேவாதி தேவனை ஆராதிக்க விடாமல், 'பக்தி!' என்கிற பெயரில் தவறான நம்பிக்கையை ஜனங்களுக்குள் விதைக்கிற அசுத்த ஆவிகள், அவர்களுடைய மனக் கண்களைக் குருடாக்க எத்தினிக்கிற தீய ஆவிகள் அனைத்தும் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

(ii) மனிதர்களாகிய தங்களைத் தெய்வமாகக் காண்பித்துக் கொண்டு, ஜனங்களை ஏமாற்றி, வஞ்சிக்கிற அசுத்த ஆவிகளின் கிரியைகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்.** அந்தக் கொடிய மனிதர்களின் வேஷம் கலைக்கப்பட **ஜெபியுங்கள்.** அவர்களுடைய பொக்கிஷங்கள் மற்றும் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட **ஜெபியுங்கள்.** இப்படியாக ஜனங்களை வஞ்சிக்கிற சகல அசுத்த ஆவிகளையும் கட்டி **ஜெபியுங்கள்.**

(iii) மந்திரம் மற்றும் பில்லி–சூனியங்கள் மூலமாகக் கிரியை செய்கிற அசுத்த ஆவிகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்.** இரத்த வெறி பிடித்த ஆவிகள், நரபலிகள் கொடுக்கப்படுகிறதின் மூலமாக தன்னை பெலப்படுத்திக் கொள்கிற பொல்லாத ஆவிகளின் பலி பீடங்கள் மற்றும் அவைகளின் கருவறைகள் முற்றிலுமாக அழிக்கப்பட **ஜெபியுங்கள்.**

(iv) ஜனங்களை வேதனைப்படுத்துகிற எந்த விதமான மந்திரவாதமோ, பில்லி–சூனியமோ பலிக்கவே கூடாது. அடர்ந்த காடுகள், குகைகள் மற்றும் மலைப் பிரதேசங்களில் கிரியை செய்கிற இந்த வகைப் பிசாசின் கிரியைகளை முற்றிலுமாக சுட்டெரித்து **ஜெபியுங்கள்.**


(v) விபச்சாரம், வேசித்தனம் மற்றும் காம விகாரத்தைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.** தங்களுடைய 'சொந்தப் பிள்ளை'கள், 'சொந்த சகோதர, சகோதரிகள்' என்று கூடப் பார்க்காமல், அவர்களோடு தங்கள் மாம்ச இச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும்படியான அசூசியான விபச்சாரக் கிரியைகளைச் செய்யத் தூண்டுகிற அசுத்த ஆவிகள், கர்த்தராகிய தேவன் அறவே வெறுக்கிற கொடிய பாவமான 'ஓரினச் சேர்க்கை'யைத் தூண்டுகிற அசுத்த ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

(vi) குடி வெறி, மது பானம், போதை வஸ்துக்கள், இன்டெர்நெட் மூலமான ஆபாசப் படங்கள், வீடியோ விளையாட்டுகள் மூலமாக, ஜனங்களை விபரீதமான காரியங்களைச் செய்யத் தூண்டுகிற அசுத்த ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

3. தேசத்திலுள்ள அதிகார ஸ்தானங்களில் கிரியை செய்கிற, துரைத்தனம் பண்ணுகிற அசுத்த ஆவிகள் கட்டப்பட**ஜெபியுங்கள்.** மதக் கலவரங்களையும், இனக் கலவரங்களையும் தூண்டி, ஜனங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிற பொல்லாத மனிதர்களை (**மதவாதிகள், அரசியல்வாதிகள், தீவிரவாதிகள், திரைப்படத் துறையினர், பெரும் தொழிலதிபர்கள் etc.,**) பயன்படுத்துகிற அசுத்த ஆவிகளைக் கட்டி **ஜெபியுங்கள்.**

4 விபத்துகள், தற்கொலைகள், கருக் கலைப்புகள், பெண் சிசுக் கொலைகள், கொலைகள் போன்ற விபரீதமான காரியங்களைத் தூண்டி, தன்னுடைய இரத்த வெறியைத் தீர்த்து, அதன் மூலமாக தன்னைத்தானே பெலப்படுத்திக் கொள்கிற பொல்லாத அசுத்த ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

5.. வான மண்டலத்திலிருந்து கொண்டு கிரியை செய்கிற பொல்லாத ஆவிகளின் சேனைகள் முற்றிலுமாக சிதறடிக்கப்பட **ஜெபியுங்கள்.** இந்தியாவில் கிரியை செய்கிற பொல்லாத பலவான் (**சாத்தான்**) கட்டப்பட **ஜெபியுங்கள்.** ஜனங்களை மதி மயங்கச் செய்து, அவர்களுடைய மனக் கண்களைக் குருடாக்கி வைத்து, அவர்களை செயல்பட விடாமல் செய்கிற அசுத்த ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.** எல்லாத் தரப்பு மக்களிடையேயும் ஆவிக்குரிய ஒரு விழிப்புணர்வை கர்த்தர் கட்டளையிட **ஜெபியுங்கள்.**



# மன்றாடி ஜெபியுங்கள்!

1. தேவனாகிய கர்த்தருடைய இரக்கத்திற்காகக் கெஞ்சி **ஜெபிப்போம்.** நாம் செய்த பாவங்களையும், நம் தேசம் செய்த பாவங்களையும் கர்த்தர் மன்னிக்கும்படியாக **ஜெபிப்போம்.** (**நெகேமியா 1:6,7. தானியேல் 9:4–19**).

2. **1 தீமோ. 2:4**ன்படி, நம் இந்திய தேசத்திலுள்ள சுமார் 138 கோடி மக்களின் இரட்சிப்பிற்காக, அவர்களுடைய மனக் கண்கள் திறக்கப்படும்படியாக, பக்தியுள்ள நம் தேசத்து மக்களுக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்தும்படியாக மன்றாடி **ஜெபிப்போம்.**

3. கடைசிக் கால எழுப்புதலில் சிறு பிள்ளைகளின் பங்கு மிக முக்கியமானது. ஆகவே இப்பொழுது சாத்தானின் கவனம் சிறு பிள்ளைகள் மேல் திரும்பியிருக்கிறது! சிறு வயதிலேயே கொடூரமான பாவங்கள் அவர்களை சூழ்ந்திருக்கிறது! தேசத்தில் எங்குமே சிறு பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு

இல்லை. கர்த்தரே சிறு பிள்ளைகளைப் பாதுகாக்கும்படியாக, அவர்களை இரட்சிக்கும்படியாக, ஒவ்வொரு சிறு பிள்ளைகளும் (சாமுவேலைப் போல) தீர்க்கதரிசன அபிஷேகத்தோடு வளர மன்றாடி **ஜெபிப்போம்.**

4. வரப் போகிற எழுப்புதலுக்கென்று, தேசத்தில் ஒரு 'யௌவன' சந்ததி **(ஒரு புதிய தலைமுறை)** புறப்பட்டு வரப் போகிறது! திரள் கூட்ட வாலிபர்கள், கர்த்தருக்காக ஒரு மாபெரும் '**சேனை**'யாக எழும்பப் போகிறார்கள்! இதை அறிந்த பிசாசானவன், வாலிபப் பிள்ளைகளை பாவத்திற்குள்ளும், இச்சைகளுக்குள்ளும், முரட்டாட்டத்திற்குள்ளும், உலகப் பிரகாரமான வீணான காரியத்திற்குள்ளும் திசை திருப்பி, அவர்களை நரக அக்கினிக்கு நேராக வழி நடத்துகிறான். அவனால் பிடிக்கப்பட்டிருக்கிற நம் தேசத்து வாலிபப் பிள்ளைகள் கர்த்தரால் விடுவிக்கப்படும்படியாக, அவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருக்கென்று ஒரு மாபெரும் 'சேனை'யாக எழும்பும்படி மன்றாடி **ஜெபிப்போம்.**

5. சுவிசேஷத்திற்கு விரோதமாக எழும்புகிறவர்கள், மத வைராக்கியம் கொண்டவர்கள், தேவாலயங்களை இடித்து நாசமாக்கத் திட்டமிடுகிறவர்கள், தேவாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரிக்க முயற்சி செய்கிறவர்கள், கண் மூடித்தனமாக தேவ ஊழியர்களை தாக்குகிற பொல்லாத மனிதர்கள் இரட்சிக்கப்பட, சவுலை பவுலாக மாற்றிய தேவன் இப்படிப்பட்ட மக்களை சந்திக்கும்படியாக மன்றாடி **ஜெபிப்போம்.**

6. கொர்நேலியுவையும், அவருடைய குடும்பத்தையும் இரட்சித்த தேவன் **(அப். 10)**, சிறைச்சாலைக் காவல்காரனின் குடும்பத்தை இரட்சித்த தேவன் **(அப்.16),** நம் தேசத்திலுள்ளள அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் இரட்சித்து, தமக்கு சாட்சியாக நிறுத்தும்படி மன்றாடி **ஜெபிப்போம்.**

7. ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில், மாய வித்தைக்காரர்களும், மந்திரவாதிகளும், 'மார்ஸ் மேடை' நியாயாதிபதியும் இரட்சிக்கப்பட்டதைப்போல, அஞ்ஞானக் கிரியைகளில் ஈடுபடுகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு, வெளியரங்கமாய் தங்கள் ஆவிக்குரிய செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிடும்படியாக **(அப்.19:18,19)** மன்றாடி **ஜெபிப்போம்.**

8. இரத்தாம்பரம் விற்றுக் கொண்டிருந்த லீதியாளின் உள்ளத்தை கர்த்தர் திறந்து இரட்சித்ததைப்போல, நம் இந்திய தேசத்திலுள்ள பிரபலமான தொழிலதிபர்கள், விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள், திரையுலகப் பிரபலங்கள் இரட்சிக்கப்பட, அவர்கள் அனைவரும் கர்த்தருடைய ஊழியங்களைத் தாங்குகிறவர்களாக, ஜெபிக்கிறவர்களாக மாற மன்றாடி **ஜெபிப்போம்.**

9. உங்கள் சொந்த மாநில மக்கள், மாவட்ட மக்கள், உங்கள் ஊரிலுள்ள, உங்கள் தெருவிலுள்ள மக்கள் இரட்சிக்கப்பட, உங்களோடு பணி

புரிகிறவர்கள், உங்களோடு தொடர்பில் இருக்கிறவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட மன்றாடி **ஜெபிப்போம்.**

10. உங்கள் சொந்தக் குடும்பத்தில் இன்னும் இரட்சிக்கப்படாமல் இருக்கிறவர்கள், உங்கள் உறவினர்கள், நீங்கள் ஆராதிக்கப் போகிற திருச்சபையில் இருக்கிற இரட்சிப்பின் நிச்சயம் இல்லாதவர்கள் இரட்சிக்கப்பட மன்றாடி **ஜெபிப்போம்.**



# பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்!

**1. குடும்பங்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!**

குடும்பங்கள் சரியாக இருந்தால்தான், சமுதாயம் சரியாக இருக்கும். எனவே, இந்தக் கடைசி நாட்களில் குடும்பங்களை சீரழிக்க சத்துருவானவன் பலத்த விதங்களில் சதி செய்கிறான். குடும்பங்களில் கள்ள உறவுகள், விவாக ரத்துக்கள், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையே பிரிவினைகள் போன்ற காரியங்கள் நடைபெறாமல் இருக்க, எல்லா குடும்பங்களிலும் சமாதானம் பெருக **ஜெபியுங்கள்.**



**2. பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்!**

வருங்காலத் தலைமுறையின் மன நிலையை கர்த்தர் பாதுகாக்க வேண்டும். மன அழுத்தம், காம விகாரம், தவறான பாவப் பழக்க வழக்கங்களில் பிள்ளைகள் சிக்கிக் கொள்ளாமல் இருக்க **ஜெபியுங்கள்.**

சிறு பெண் பிள்ளைகள், இளம் வாலிபப் பெண் பிள்ளைகள் திரளாய் கடத்தப்படுகிறார்கள். அவைகள் தடுத்து நிறுத்தப்பட **ஜெபியுங்கள்.**



## 3. தீவிரவாதிகளின் சதித் திட்டங்களிலிருந்து தேசம் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!



தேசத்திற்கு உள்ளே இருந்தும், வெளியே இருந்தும் இந்திய தேசத்தை சீர்குலைக்க, அனேகத் தீவிரவாத இயக்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மதத் தீவிரவாதிகள், மாவோயிஸ்ட்டுகள், நக்ஸலைட்டுகள் போன்ற கொடிய தீவிரவாதிகள் திட்டுகிற எல்லா விதமான சதித் திட்டங்களையும் கர்த்தர் பைத்தியமாக்கிப் போட **ஜெபியுங்கள்.**

மக்கள் திரளாகக் கூடுகிற வழிபாட்டு ஸ்தலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், கல்வி ஸ்தாபனங்கள், வியாபார மையங்களைச் சுற்றிலும் தேவ பாதுகாப்பு இருக்க **ஜெபியுங்கள்.**

## 4. அண்டை நாடுகளினால் எந்த விதமான ஆபத்துகளும் வராமலிருக்க ஜெபியுங்கள்!




நம்முடைய இந்திய தேசத்தைச் சுற்றிலும் இருக்கிற அண்டை நாடுகளினால் நம்முடைய தேசத்திற்கு எந்த விதமான ஆபத்துகளும் வராமலிருக்க **ஜெபியுங்கள்.** மட்டுமல்ல, சீனா, பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற தேசங்கள் மூலமாக, நம்முடைய இந்திய தேசத்திற்கு எந்த விதமான பாதிப்புகளும் வராமலிருக்க, எல்லைப் பிரதேசங்கள், கடலோரப் பகுதிகள் பாதுகாக்கப்பட **ஜெபியுங்கள்.**

## 5. தண்ணீர் மற்றும் காற்றினால் தீமைகள் வராமலிருக்க ஜெபியுங்கள்!



நம் இந்திய தேசத்தின் நீர் நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும். குடி தண்ணீரில் கர்த்தருடைய பாதுகாப்பு இருக்க வேண்டும். ‘சுனாமி’ போன்ற பேரழிவுகள் இனிமேல் தேசத்தில் வரவே கூடாது. கடலோரக் கிராமங்கள், வீடுகள் பாதிக்கப்படக் கூடாது. தீவுகள் பாதுகாக்கப்பட வேண்டும். புயல், சூறாவளி, காற்று மாசுபடுதல் போன்ற ஆபத்துகள் தேசத்திற்கு வரவே கூடாது. இந்தக் காரியங்களுக்காக **ஜெபியுங்கள்.**

## 6. கடல் தொழில் செய்கிறவர்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!



கடல் தொழில் செய்கிறவர்களின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்படவேண்டும். கடல் தொழில் செய்கிறவர்களின் உயிர் மற்றும் உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். தங்களுடைய பிரயாசத்திற்கேற்ற

பலனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். பெரிய முதலாளிமார்கள் தீட்டுகிற சதித் திட்டங்கள் முற்றிலும் அபத்தமாக **ஜெபியுங்கள்.**

## 7. விவசாயிகள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!



விவசாயமே நமது இந்திய தேசத்தின் முதுகெலும்பு! ஆனால் இன்றைக்கு விவசாயிகள் திரளாய் பாதிக்கப்படுகிறார்கள். விவசாய நிலங்கள் பாதிக்கப்படக் கூடாது. விவசாயம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். விவசாயிகளின் மன நிலை பாதிக்கப்படக் கூடாது. ஒரு விவசாயி கூட தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. விவசாயப் பயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக **ஜெபியுங்கள்.**

## 8. சிறு, தெருவோர வியாபாரிகள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!



பெரிய பெரிய 'கார்ப்பரேட்' வியாபாரிகளின் செயல்பாடுகளினால் சிறு வியாபாரிகள், நடை பாதை வியாபாரிகளின் தொழில்கள், அவர்களுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படக் கூடாது. அவர்களுடைய தொழில்கள், குடும்பங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தோட்டத் தொழிலாளிகள், எஸ்டேட்டில் பணி புரிபவர்களின் வேலைகள் பாதுகாக்கப்பட **ஜெபியுங்கள்.**

## 9. தேசத்தின் பொருளாதாரம் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!

சமீப காலங்களாக நமது இந்திய தேசத்தின் பொருளாதார வளர்ச்சி இறங்கு முகமாகவே இருக்கிறது. இந்நிலை மாற வேண்டும். தேசத்தின் பொருளாதாரம் உயர்த்தப்பட வேண்டும். நமது நீதித் துறையினர், அமைச்சகம், அரசு அதிகாரிகள் மற்றும் ரிசர்வ் வங்கி அதிகாரிகளை விசேஷித்த ஞானத்தினால் கர்த்தர் நிரப்பிட, உலக அரங்கில் நமது இந்திய தேசத்தின் பொருளாதாரம் உயர்த்தப்பட **ஜெபியுங்கள்.**



## 10. மருத்துவத் துறை மற்றும் கல்வித் துறை பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்!




தவறாக கொடுக்கப்படுகிற மருத்துவ சிகிச்சைகளின் மூலமாக தேசத்திலுள்ள வயோதிகர்கள், வாலிபர்கள் பாதிக்கப்படக் கூடாது. 'கல்வி!' என்கிற பெயரில், தவறான கல்வி முறைகள் மற்றும் அஞ்ஞானக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற காரியங்கள் கல்வித் துறையில் புகுத்தப்படக் கூடாது. இந்த 2 துறைகளையும் கர்த்தர் பாதுகாக்க **ஜெபியுங்கள்.**




# ஆசீர்வதித்து ஜெபியுங்கள்!









1. நமது தேசம் உலக அரங்கில் அனைத்துத் துறைகளிலும் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாக விளங்க வேண்டும். எல்லா மக்களுக்கும் அடிப்படைத் தேவைகள் குறைவில்லாமல் சந்திக்கப்பட, உணவு, உடை, இருப்பிடம், சுத்தமான குடி நீர், சாலை வசதிகள், மின்சார வசதிகள், கழிப்பிட வசதிகள், சொந்த வீடு போன்ற காரியங்களில் தன்னிறைவு பெற்ற தேசமாக மாற, தேசத்தை ஆசீர்வதித்து **ஜெபியுங்கள்.**

2. தேசத்தை ஆளுகிறவர்களை ஆசீர்வதித்து **ஜெபியுங்கள்.** நமது ஜனாதிபதி, பிரதம மந்திரி, மத்திய மந்திரிகள், எல்லா மாநில கவர்னர்கள், முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆசீர்வதிக்கப்பட, அவர்கள் பாதுகாக்கப்பட, அவர்கள் மூலமாக அனேக நன்மையான காரியங்கள் தேசத்தில் நிறைவேற **ஜெபியுங்கள்.** பாராளுமன்றம், மாநில சட்டமன்றங்களில் கர்த்தருடைய ஆளுகை இருக்க **ஜெபியுங்கள்.**

3. அதிகாரிகளுக்காக **ஜெபியுங்கள்.** முப்படைத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள், மத்திய அரசாங்கத்திலுள்ள பல்வேறு துறை அதிகாரிகள் ஆசீர்வதிக்கப்பட, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர்கள், தாசில்தார்கள் மற்றும் தேசத்திலுள்ள ஒவ்வொரு அரசுத் துறைகளிலும் உள்ள அதிகாரிகள் அனைவரும் தேவ ஞானத்தால் நிரப்பப்பட **ஜெபியுங்கள்.**

4. தேசத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து, நீதியை நிலைநாட்டுகிற நீதித்துறைக்காக, உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்களிலுள்ள அனைத்து நீதிபதிகள் மற்றும் அனைத்து

வழக்குரைஞர்களுக்காக, கர்த்தருடைய ஆளுகை அவர்கள் மேல் இருக்க **ஜெபியுங்கள்.**

5. எல்லா I.A.S., அதிகாரிகள், I.P.S., அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் ஆசீர்வதிக்கப்பட, பாதுகாக்கப்பட, அவர்கள் தங்கள் பொறுப்பில் உண்மையுள்ளவர்களாக செயல்பட **ஜெபியுங்கள்.**

6. தேர்தல் ஆணையத்திற்காக, தேர்தல் அதிகாரிகளுக்காக, குற்றப் புலனாய்வுத்துறை (C.B.I.,) மற்றும் அதிலுள்ள அதிகாரிகள் தைரியமாய் செயல்பட, அவர்கள் தேவ ஞானத்தால் நிரப்பப்பட **ஜெபியுங்கள்.**

7. லஞ்சம், ஊழல் இல்லாத தேசமாக, நீதி, நேர்மை உள்ள தேசமாக, ஓட்டு வாங்குவதற்கென்று அரசியல்வாதிகள் பணம் கொடுக்காத தேசமாக, பிரயோஜனமில்லாத திட்டங்களுக்காக வரிப் பணத்தை விரயமாக்காத தேசமாக விளங்க, சுயநலமில்லாத தலைவர்கள் மற்றும் அதிகாரிகளால் தேசம் ஆளுகை செய்யப்பட **ஜெபியுங்கள்.**

8. நமது இந்தியா மதுபானக் கடைகள், போதை வஸ்துக்கள், கிரிமினல் குற்றங்கள் இல்லாத தேசமாக, வியாதிகள் இல்லாத சுகாதாரமான தேசமாக விளங்க, தேசத்தை ஆசீர்வதித்து **ஜெபியுங்கள்.**

9. தேசத்தில் வேலை வாய்ப்புகள் பெருக, படித்த இளைஞர்களுக்குத் தகுதியான வேலை கிடைக்க, தேசத்தில் தனி நபர் வருமானம் பெருக, பட்டினிகள், வறுமைகள், கடன் பாரங்கள் இல்லாமல், மக்கள் அனைவரும் சமாதானமாக வாழ **ஜெபியுங்கள்.**

10. தொழில் வளம் பெருக, தொழிற்சாலைகள் ஆசீர்வதிக்கப்பட, நமது தேசம் ஏற்றுமதியில் சிறந்து விளங்க, விஞ்ஞானத் துறையில், விளையாட்டுத் துறையில் இன்னும் சாதனைகள் பெருக, தேசத்திலுள்ள எல்லா துறைகளிலும் தேசம் ஆசீர்வதிக்கப்பட **ஜெபியுங்கள்.**















# இஸ்ரேல் தேசத்திற்காக ஜெபியுங்கள்!

மொத்த மக்கள் தொகை : 90.62 லட்சம்.
யூதர்கள் : 71.21லட்சம்.
மாவட்டங்கள் : 7. (வடக்கு மாவட்டம், மத்திய மாவட்டம், ஹைப்பா மாவட்டம், தெற்கு மாவட்டம், எருசலேம் மாவட்டம், டெல் அவிவ் மாவட்டம், யூதேயா & சமாரியா மாவட்டம்).




**1. ஸ்தோத்திர ஜெபம்!**

இஸ்ரேல் தேசத்து ஜனங்களை கர்த்தர் தமது சொந்த ஜனங்களாக தெரிந்து கொண்டபடியினால், இவர்கள் மத்தியில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலக இரட்சகராக அவதரித்து, இந்த தேசத்தில் நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தபடியினால், இரத்தம் சிந்தி, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்தபடியினால், இந்த தேசத்தில் பரிசுத்த ஆவியானவர் முதன் முதலாகப் பொழிந்தருளப் பட்டபடியினால், மறுபடியும் அவருடைய பாதங்கள் இங்குள்ள ஒலிவ மலையின் மேல் நிற்கப் போகிறபடியினால், உலக எழுப்புதலுக்கு இஸ்ரேல் தேசத்தை ஒரு அச்சாணியாகக் கர்த்தர் வைத்திருக்கிறபடியால் அவரை **ஸ்தோத்தரிப்போம்!**

**2. போராட்ட ஜெபம்!**

இஸ்ரேல் தேசத்தின் இரட்சிப்புக்கு, எழுப்புதலுக்கு விரோதமாகவும் கிரியை செய்கிற பிசாசின் கிரியைகளும், வான மண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும், இப்பிரபஞ்சத்தின் ஆவிகளும், பாதாளத்திலிருந்து ஏறி வருகிற ஆவிகளும் கட்டப்பட **ஜெபியுங்கள்.** பொல்லாத கானானிய ஆவிகளின் கிரியைகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்..**

**3. எழுப்புதலுக்கான ஜெபம்!**

- ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் நடைபெற்றதுபோல, இந்த தேசத்தில் மறுபடியும் ஒரு எழுப்புதல் அக்கினி போடப்பட, அங்குள்ள திருச்சபைகளுக்குள்ளும் பெந்தெகொஸ்தே அனுபவம் திரும்பி வர, அங்குள்ள தேவ ஊழியர்கள் எழுப்புதல் தரிசனம் பெற, விசுவாசிகள் ஜெபிக்கிறவர்களாக மாற பாரத்தோடு **ஜெபியுங்கள்.**

- அந்த தேசத்திலுள்ள திருச்சபைகளுக்குள் கள்ள உபதேசங்கள், கள்ள ஆராதனைகள், போலியான எழுப்புதல் நுழையாதபடி கர்த்தர் பாதுகாக்க **ஜெபியுங்கள்.**

**4. மன்றாட்டு ஜெபம்!**

“**இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்**.” (ரோமர் 11:26) என்கிற கர்த்தருடைய இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும்படி, சிறு பிள்ளைகள், வாலிபர்கள், பெரியவர்கள், மதவாதிகள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட, அவர்களுக்குள் இருக்கிற வீண் பெருமைகள், பாரம்பரியங்கள் மற்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிற சடங்காச்சாரங்களிலிருந்து அவர்கள் விடுதலை பெற்று, **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மேசியா** என்பதை ஏற்றுக் கொள்ள **ஜெபியுங்கள்.**

**5. பாதுகாப்பின் ஜெபம்!**

இஸ்ரேல் தேசத்தை அழிக்கும்படியாக, அந்த தேசத்தைச் சுற்றிலும் இருக்கிற சுமார் 24 நாடுகள் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த தேசங்களின் சகல சதி வேலைகளும் அழிக்கப்படும்படியாக, அந்த தேசங்களின் தலைவர்களையும், இராணுவங்களையும் தூண்டுகிற வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள் கட்டப்படும்படியாக, அந்த தேசத்திற்குள்ளேயே இருந்து கொண்டு கிரியை செய்கிற தீவிரவாதத்தின் செயல்பாடுகள் முடக்கப்படும்படியாக **ஜெபியுங்கள்.**

**6. ஆசீர்வாத ஜெபம்!**

“இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம்.” என்று கர்த்தர் சொல்லி இருக்கிறபடியே, இந்த தேசத்தின் பொருளாதாரம், விளை நிலங்கள், நீர் நிலைகள் ஆசீர்வதிக்கப்பட, மலைப் பிரதேசங்களில், வனாந்திரங்களில் மறைந்திருக்கிற ஆசீர்வாதங்கள் வெளி வர, சிதறிப் போன தேசங்களிலிருந்து திரும்பி வருகிற யூதர்களின் வாழ்வாதாரங்கள் ஆசீர்வதிக்கப்பட **ஜெபியுங்கள்.**

**7. தேசத்தை ஆளுகிறவர்களுக்காக ஜெபம்!**

இந்த தேசத்தை ஆளுகிறவர்கள் மேல் கர்த்தரின் ஆளுகை, தேவ ஞானம் வெளிப்பட **ஜெபியுங்கள்.** நன்மையான திட்டங்கள், எழுப்புதலுக்கு ஆதரவான திட்டங்களை செயல்படுத்த **ஜெபியுங்கள்.** ஓரினச் சேர்க்கையாளர்களின் பேரணி, விபச்சாரம், குடி வெறி போன்ற கர்த்தர் வெறுக்கிற கொடிய பாவங்களை தடை செய்யும்படியான சட்டங்கள் கொண்டு வரப்பட **ஜெபியுங்கள்.**




# உலக தேசங்களுக்காக ஜெபியுங்கள்!

## இலங்கை தேசத்திற்காக!

- இந்த தேசத்தில் வசிக்கிற தமிழர்கள் மற்றும் சிங்களர்கள் மத்தியில் பெரிய அளவில் எழுப்புதல் ஏற்பட **ஜெபியுங்கள்.**



- இந்த தேசத்திலுள்ள அனைத்துத் திருச்சபைகளுக்குள்ளும் எழுப்புதல் அக்கினி போடப்பட, திருச்சபைகள் அனைத்தும் கர்த்தருக்குள் வைராக்கியமாக எழும்ப **ஜெபியுங்கள்.**
- இந்த தேசத்தை ஆளுகிறவர்கள், தமிழ் மக்கள் மீது வெறுப்புணர்வை காண்பிக்காமல், அவர்கள் மறுபடியும் வாழ்ந்திருக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள **ஜெபியுங்கள்.**

## அமெரிக்கா தேசத்திற்காக...



➢ அமெரிக்கா தேசத்தில் சமூகக் கலாச்சாரச் சீரழிவுகள் காணப்படுகிறது. இதனால் குடும்பங்கள் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமை மாறிட **ஜெபியுங்கள்.**

➢ இந்த தேசத்தில் பொருளாதாரம், விஞ்ஞானம், மருத்துவம் சார்ந்த துறைகளில் வளர்ச்சி ஏற்பட **ஜெபியுங்கள்.**

➢ இந்த தேசத்திலுள்ள அனைத்து திருச்சபைகளிலும் பரிசுத்த ஆவியானவரின் அக்கினி ஊற்றப்பட்டு எழுப்புதல் ஏற்பட **ஜெபியுங்கள்.**

## மத்தியக் கிழக்கு தேசங்களுக்காக...

- மத்தியக் கிழக்கு தேசங்களான அரபு நாடுகளிலும், வளைகுடா நாடுகளிலும் இருக்கிற இரகசியக் கிறிஸ்தவர்கள் மூலமாக எழுப்புதல் பற்றியெரிய **ஜெபியுங்கள்.**
- எண்ணெய் வளமிக்க இந்த நாடுகளின் பொருளாதாரம் ஆசீர்வதிக்கப்பட **ஜெபியுங்கள்.**
- இந்த தேசங்களில் கர்த்தரை ஆராதிக்கத் தடையில்லாத சூழ்நிலைகள் உருவாக **ஜெபியுங்கள்.**

## மலேசியா தேசத்திற்காக...



- மலேசியா தேசத்திலுள்ள தமிழர்கள், சீனர்கள், மலாய் மக்கள் மற்றும் பலதரப்பட்ட ஜனங்களின் இரட்சிப்பிற்காக **ஜெபியுங்கள்.**
- இங்குள்ள திருச்சபைகள் மீது எழுப்புதல் அக்கினி போடப்பட்டு, அது தேசமெங்கும் பரவ **ஜெபியுங்கள்.**

## ஆப்பிரிக்கா தேசங்களுக்காக...

- ஆப்பிரிக்கா தேசங்களில் உள்ள அனைத்து நாடுகளிலும் மிகப் பெரிய எழுப்புதல் அக்கினி போடப்பட **ஜெபியுங்கள்.**



- இந்த தேசங்களிலிருந்து தவறான கள்ள உபதேசங்கள் மற்றும் போலியான அற்புதங்களைச் செய்து, ஜனங்களை வஞ்சிக்கிறவர்கள் எழும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உலகம் முழுவதும் செல்வதை கர்த்தர் தடுத்து நிறுத்திட **ஜெபியுங்கள்.**
- இந்த தேசங்களில் இருக்கிற எல்லா திருச்சபைகளிலும் உள்ள தேவ பிள்ளைகளுக்குள்ளும், **'கர்த்தரே தேவன்!'** என்று அறியும்படியான ஆவிக்குரிய தெளிவை கொடுக்கும்படியாக **ஜெபியுங்கள்.**

**ஆசிய நாடுகளில்** கர்த்தர் தம்முடைய எழுப்புதலை அனுப்பும்படியாக, இந்த தேசங்களிலிருந்து உலகத்தைக் கலக்கும் திரளான தேவ மனிதர்கள் எழும்பிட **ஜெபியுங்கள்.**

**ஐரோப்பிய நாடுகளில்** மறுபடியும் ஒரு ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகிட, பாரம்பரிய திருச்சபைகள் மற்றும் ஆவிக்குரிய தலைவர்கள் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்ட **ஜெபியுங்கள்.**


உலகம் முழுவதும் உள்ள **தீவு தேசங்களின் பாதுகாப்பிற்காக**வும், இந்த தீவு தேசங்களுக்கு தண்ணீரினால் எந்த விதமான ஆபத்துகள் வராதிருக்கவும் **ஜெபியுங்கள்.**



# இந்தியா

| | |
|---|---|
| மக்கள் தொகை | : சுமார் 138 கோடி |
| **இந்துக்கள்** | **: சுமார் 80 கோடி.** |
| **இஸ்லாமியர்கள்** | **: சுமார் 13 கோடி.** |
| **கிறிஸ்தவர்கள்** | **: சுமார் 2.5 கோடி.** |
| மக்களினம் | : சுமார் 4,635. |
| பேசும் மொழிகள் | : சுமார் 1,652 |
| மாநிலங்கள் | : 28 |
| யூனியன் பிரதேசங்கள் | : 9 |

*- This Map Not to Scale - For Prayer Purpose Only*




## இந்திய தேசத்தைப் பற்றிய சில தகவல்கள்!

- சுமார் 2 லட்சம் கிராமங்களுக்கும் மேல் போதிய **சாலை வசதிகள் கிடையாது!**
- சுமார் 1 கோடி பேர் **குழந்தை தொழிலாளர்**களாக இருக்கிறார்கள்!
- சுமார் 6.2 கோடி பேர் **குடிசைகளில் வாழ்கிறார்கள்!**
- சுமார் 20 கோடி பேருக்கு **ஒரு வேளை உணவே கிடைக்கிறது!**
- சுமார் 20 கோடி பேருக்கு **இரவு உணவு கிடைப்பதில்லை!**
- சுமார் 42 கோடி பேருக்கும் அதிகமானோர் **தினக் கூலி**களாக இருக்கிறார்கள்!
- உலகிலேயே **பாலியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகும் குழந்தை**கள் இந்தியாவில்தான் அதிகம்!
- ஒவ்வொரு நாளும் சராசரியாக **1,374 விபத்துகள்** நடக்கின்றன. இதில் சுமார் 400 பேர் **பரிதாபமாக உயிரிழக்கின்றனர்!**
- **சாலை விபத்துகளில், முதல் 10 மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில்** இருக்கிறது!
- ஒவ்வொரு வருடமும் சுமார் **29 லட்சம் பேர் புற்று நோய்**க்கு சிகிச்சை பெறுகிறார்கள்.

# இந்தியாவிலுள்ள மாநிலங்கள்!

| வ.எண் | மாநிலங்கள் | மக்கள் தொகை (சுமார்) | கிராமங்கள் | கிறிஸ்தவர்கள் | மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு | 8 கோடி | 17,680 | 6.12% | 38 |
| 2. | கேரளா | 4 கோடி | 1,553 | 17% | 14 |
| 3. | ஆந்திரா | 5.3 கோடி | 17,286 | 1.3% | 31 |
| 4. | தெலுங்கானா | 4 கோடி | 12,751 | 1.3% | 31 |
| 5. | கர்நாடகா | 6.8 கோடி | 29,736 | 1.87% | 30 |
| 6. | கோவா | 34 லட்சம் | 411 | 26% | 2 |
| 7. | மஹாராஷ்டிரா | 12.10 கோடி | 43,665 | 1% | 36 |
| 8. | சத்தீஷ்கர் | 2.90 கோடி | 20,126 | 1% | 27 |
| 9. | ஒடிசா | 4.6 கோடி | 51,583 | 2.77% | 30 |
| 10. | ஜார்கண்ட் | 3.7 கோடி | 32620 | 4.3% | 24 |
| 11. | பிஹார் | 11 கோடி | 45,076 | 1.1% | 40 |
| 12. | மேற்கு வங்காளம் | 9.5 கோடி | 37,945 | 0.72% | 23 |
| 13. | அஸ்ஸாம் | 3.5 கோடி | 26,247 | 3.70% | 33 |
| 14. | மேகாலயா | 35 லட்சம் | 853 | 74.59% | 11 |
| 15. | திரிபுரா | 45 லட்சம் | 1,178 | 4.45% | 8 |
| 16. | மிசோரம் | 11 லட்சம் | 853 | 87.16% | 8 |
| 17. | மணிப்பூர் | 32 லட்சம் | 2,639 | 41.29% | 16 |
| 18. | நாகலாந்து | 23 லட்சம் | 1,238 | 88.1% | 12 |
| 19. | அருணாச்சலப்பிரதேசம் | 16 லட்சம் | 5,536 | 30.26% | 25 |
| 20. | சிக்கிம் | 6.60 லட்சம் | 441 | 9.9% | 4 |
| 21. | உத்திரப் பிரதேசம் | 21.75 கோடி | 1,10,453 | 0.1% | 75 |
| 22. | மத்தியப் பிரதேசம் | 7.3 கோடி | 55,429 | 0.3% | 51 |
| 23. | குஜராத் | 6.1 கோடி | 18,676 | 0.52% | 33 |
| 24. | இராஜஸ்தான் | 7.3 கோடி | 44,981 | 0.13% | 33 |
| 25. | பஞ்சாப் | 3 கோடி | 12,858 | 1.26% | 22 |
| 26. | ஹரியானா | 3 கோடி | 6,841 | 0.2% | 22 |
| 27. | உத்திராஞ்சல் | 1 கோடி | 16,919 | 0.37% | 13 |
| 28. | இமாச்சலப் பிரதேசம் | 69 லட்சம் | 20,752 | 0.8% | 12 |

## யூனியன் பிரதேசங்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| 1. டெல்லி | 2.0 கோடி | 225 | 0.9% | 11 |
| 2. சண்டிகார் | 11 லட்சம் | 13 | 1% | 1 |
| 3. புதுச்சேரி | 13 லட்சம் | 101 | 9% | 4 |
| 4. அந்தமான் & நிக்கோபர் தீவுகள் | 4 லட்சம் | 560 | 26% | 3 |
| 5. லட்சத் தீவுகள் | 75 ஆயிரம் | 27 | 1% | 1 |
| 6. டாமன் டையூ | 2.75 லட்சம் | 27 | 3% | 2 |
| 7. தாத்ரா நாகர் ஹாவேலி | 3.50 லட்சம் | 71 | 3% | 1 |
| 8. ஜம்மு & காஷ்மீர்<br>9. லடாக் | 1.38 கோடி<br>3 லட்சம் | 7,905 | 0.3% | 22 |

# தமிழ்நாடு




- This Map Not to Scale - For Prayer Purpose Only

| | |
|---|---|
| தலைநகர் | : சென்னை |
| மக்கள் தொகை | : சுமார் 8 கோடி |
| கிறிஸ்தவர்கள் | : 6.12% |
| முஸ்லீம்கள் | : 5.89% |
| இந்துக்கள் | : 87.58% |
| மாவட்டங்கள் | : 38 |
| கிராமங்கள் | : 17,680 |
| தாலுகா | : 302 |
| எழுத்தறிவு | : 81% |
| பேசும் மொழி | : தமிழ் |
| பாராளுமன்ற தொகுதிகள் | : 39 |
| சட்டமன்ற தொகுதிகள் | : 234 |

## புதிய மாவட்டங்கள்!

**1. கள்ளக்குறிச்சி.**
**2. தென்காசி.**
**3. திருப்பத்தூர்.**
**4. இராணிப்பேட்டை.**
**5. செங்கல்பட்டு.**
**6. மயிலாடுதுறை**

# தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள்!

| வ. எண் | மாவட்டங்கள் | மக்கள் தொகை (சுமார்) | கிறிஸ்தவர்கள் | தாலுகாக்கள் | கிராமங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 21 லட்சம் | 46.85% | 6 | 81 |
| 2. | திருநெல்வேலி | 34 லட்சம் | 11.85% | 16 | 628 |
| 3. | தூத்துக்குடி | 25 லட்சம் | 16.68% | 10 | 480 |
| 4. | விருதுநகர் | 22 லட்சம் | 3.47% | 10 | 600 |
| 5. | இராமநாதபுரம் | 15 லட்சம் | 6.73% | 9 | 444 |
| 6. | சிவகங்கை | 15 லட்சம் | 5.64% | 9 | 521 |
| 7. | மதுரை | 34 லட்சம் | 3.22% | 11 | 665 |
| 8. | தேனி | 14.5 லட்சம் | 3.02% | 5 | 130 |
| 9. | திண்டுக்கல் | 24 லட்சம் | 3.02% | 10 | 408 |
| 10. | புதுக்கோட்டை | 18 லட்சம் | 4.5% | 12 | 763 |
| 11. | தஞ்சாவூர் | 27.5 லட்சம் | 7.93% | 9 | 906 |
| 12. | திருவாரூர் | 16 லட்சம் | 2.63% | 8 | 573 |
| 13. | நாகப்பட்டினம் | 18.5 லட்சம் | 2.94% | 8 | 523 |
| 14. | அரியலூர் | 9 லட்சம் | 2.4% | 5 | 195 |
| 15. | பெரம்பலூர் | 6.7 லட்சம் | 1.82% | 4 | 152 |
| 16. | திருச்சி | 31 லட்சம் | 9.04% | 12 | 507 |
| 17. | கரூர் | 13 லட்சம் | 1.55% | 6 | 203 |
| 18. | திருப்பூர் | 30 லட்சம் | 2.82% | 9 | 357 |
| 19. | கோவை | 40 லட்சம் | 5.5% | 11 | 295 |
| 20. | நீலகிரி | 9 லட்சம் | 11.5% | 6 | 58 |
| 21. | ஈரோடு | 25 லட்சம் | 3.38% | 10 | 375 |
| 22. | நாமக்கல் | 20 லட்சம் | 0.98% | 8 | 391 |
| 23. | சேலம் | 40 லட்சம் | 1.55% | 12 | 640 |
| 24. | கிருஷ்ணகிரி | 22 லட்சம் | 1.91% | 8 | 661 |
| 25. | திருவண்ணாமலை | 28 லட்சம் | 2.72% | 12 | 1067 |
| 26. | தர்மபுரி | 17 லட்சம் | 0.94% | 7 | 470 |
| 27. | விழுப்புரம் | 20.5 லட்சம் | 4% | 13 | 862 |
| 28. | கடலூர் | 30 லட்சம் | 3.20% | 10 | 905 |
| 29. | காஞ்சிபுரம் | 46 லட்சம் | 6.42% | 13 | 1137 |
| 30. | சென்னை | 1.20 கோடி | 8% | 16 | 122 |
| 31. | திருவள்ளூர் | 42.5 லட்சம் | 6.27% | 12 | 792 |
| 32. | வேலூர் | 44 லட்சம் | 2.83% | 13 | 843 |




"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல்,
பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."
ஏசாயா 11:9.

Jesus Redeems MINISTRIES

*Nalumavadi - 628 211, Thoothukudi Dt., T.N., India.*
*Phone: 04639 - 22 00 22*
*eMail: info@jesusredeems.org*
*Web: www..jesusredeems.org*